பாரதீய சனதா கட்சியும் தமிழும்
நரேந்திர மோடியின் திடீர் தமிழ்ப் பாசம்

பத்மா நாராயணசாமி

Bharatiya Janata Party (BJP) and Tamil
Narendra Modi's Sudden Love for Tamil

(Tamil Book)

Padma Narayanasamy

பாரதீய சனதா கட்சியும் தமிழும்

நரேந்திர மோடியின் திடீர் தமிழ்ப் பாசம்

பத்மா நாராயணசாமி

Bharatiya Janata Party (BJP) and Tamil

Narendra Modi's Sudden Love for Tamil

(Tamil Book)

Padma Narayanasamy

பதிப்புரிமை: பத்மா நாராயணசாமி 2023

இப்புத்தகத்தையோ, இதன் பகுதிகளையோ யார் வேண்டுமானாலும் அச்சுப் புத்தகங்களாகவோ, கணினி வழியாகவோ, வலைத்தளங்களிலோ, ஊடகங்களிலோ, வேறு வடிவிலோ வெளியிடலாம். எங்களிடம் அனுமதி கேட்க வேண்டியதில்லை.

Copyright: Padma Narayanasamy 2023

This book or any chapter in the book may be copied, distributed, reposted, reprinted, translated or shared in print, electronic, digital, Internet or other media. No permission needed from copyright holder.

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல். - திருக்குறள்

நெஞ்சில் உரமும் இன்றி
நேர்மைத் திறமும் இன்றி
வஞ்சனை சொல்வாரடி கிளியே
வாய்ச்சொல்லில் வீரரடீ - பாரதியார் பாடல்

உள்ளடக்கம்

1. முன்னுரை

2. தலைமையமைச்சர் நரேந்திர மோடியின் தமிழ்ப் புகழ்ச்சி

3. பாரதீய சனதா கட்சியின் தமிழ்ப் பகைச் செயல்கள்

4. வெத்துப் பேச்சு போதாது, செயலிலே காட்டுங்கள்

5. காங்கிரசுக் கட்சியின் இராகுல் காந்தியும் தமிழும்

துணையேட்டுப் பட்டியல்

Key words in English: Bharatiya Janata Party, BJP, Narendra Modi, Congress Party, Rahul Gandhi, Tamil Nadu, language, Sanskrit, Hindi imposition, Indian government

1. முன்னுரை

2019-ல் தஞ்சை நலங்கிள்ளி எழுதிய "Indian Government and Tamil Language (Ancient Rivalries and Current Tug of War)" என்ற ஆங்கில நூல் வெளி வந்தது [துணையேடு - 1; துணையேட்டுப் பட்டியல் (Reference List) இக்குறுநூலின் இறுதியில் உள்ளது]. அந்நூலில் வடமாநில அரசியல் தலைவர்கள் தமிழ்நாட்டுக்கு வரும் போது தமிழை உயர்த்திப் பேசுவதும், பின்னர் தமிழ்நாட்டை விட்டு வடக்கே போனதும் தமிழுக்கு யாதொன்றும் செய்யாமல், உலகெங்கும் சமசுக்கிருதத்தைப் பரப்புதல் மற்றும் இந்தியாவில் இந்தி திணிப்பு முயற்சிகளில் ஈடுபடுவது குறித்து விவரமாகச் சொல்கிறார். முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் பிரதிபா பட்டில் (Pratibha Patil), முன்னாள் தலைமையமச்சர் மன்மோகன் சிங் (Manmohan Singh), முன்னாள் தொடர்வண்டித் துறை அமைச்சர் லாலூ பிரசாத் யாதவ் (Lalu Prasad Yadav), இந்நாள் தலைமையமச்சர் நரேந்திர மோடி (Narendra Modi) ஆகியோரின் பேச்சுக்களையும், செயல்களையும் விளக்குகிறார்.

அந்நூல் வெளிவந்ததற்குப் பின் நடந்த, நடக்கும் தமிழ் போற்று நாடகங்களை இக்குறுநூலில் சுருக்கமாகத் தருகிறேன்.

உள்ளடக்கம் (முதற் பக்கம்) போக இங்கே கிளிக்கடிக்க
அல்லது தொடர்ந்து அடுத்த கட்டுரையைப் படிக்க

2. தலைமையமைச்சர் நரேந்திர மோடியின் தமிழ்ப் புகழ்ச்சி

மற்றெல்லாரையும் விடத் தமிழுக்குப் புகழாரம் சூட்டுவதில் இந்நாள் இந்தியத் தலைமையமைச்சர் நரேந்திர மோடி (Prime Minister Narendra Modi) மிஞ்சி நிற்கிறார். அவர் "தமிழே உலகின் மூத்த மொழி (world's oldest language)" என்று 2023 சனவரித் திங்களில் சொல்லியிருக்கிறார் (The New Indian Express; January 28, 2023). வாய்ப்புகழ்சியில் மிகத் தாராளமாக இருக்கும் அவர், செயலளவில் வெத்து வேட்டாகவே இருக்கிறார்.

அவருக்கும் அவரது பாரதீய சனதா கட்சியைச் (Bharatiya Janata Patrty - BJP) சார்ந்த சிலருக்கும் திடீரெனக் கடந்த சில ஆண்டுகளாகத் தமிழார்வம் ஏற்பட்டதேன்?

எவ்வளவுதான் முயற்சி செய்தாலும், பாரதீய சனதா கட்சி தமிழ்நாட்டில் வேரூன்ற முடியவில்லை. 2014 நாடாளுமன்றத் தேர்தலில் (parliament election) அது 5.5% வாக்குகள் (votes) பெற்றது. 2019 நாடாளுமன்றத் தேர்தலிலே 3.6% வாக்குகள் பெற்றது. தமிழ்நாட்டு மக்களின் வாக்குப் பெற என்ன செய்யலாம் என்று ஆய்ந்து பார்த்தார்கள். தமிழ் சார்ந்த கட்சிகள் தமிழ்நாட்டில் வெற்றிக் கொடி நாட்டுவதைக் கண்டு, தாமும் தமிழார்வம் உள்ளது போல போலி நாடகம் போடுவது பாரதீய சனதா கட்சிக்கும் வெற்றி வாய்க்கும் எனக் கருதித்தான் திரு மோடியும் பிற சிலரும் தமிழை அடிக்கடி புகழ்ந்து பேசுகிறார்கள் என்பது என் கருத்து.

என்னைப் பொறுத்தவரையில் பாரதீய சனதா கட்சியும், காங்கிரசுக் கட்சியும் தமிழ்க் கட்சிகளல்ல. இக்கட்சிகள் தமிழுக்கு ஊறு விளைத்துள்ளன. இந்தி திணிப்பில் இவ்விரண்டு கட்சிகளும் ஒரேபோல தான். இக்குறுநூல் பெரும்பாலும் பாரதீய சனதா கட்சியின் திடீர் தமிழ் போற்றுதலைக் குறித்தது என்பதால், பாரதீய சனதா கட்சி தமிழுக்கிழைத்த சில அநியாயங்களை சுருக்கமாகத் தருகிறேன்.

[உள்ளடக்கம் (முதற் பக்கம்) போக இங்கே கிளிக்கடிக்க]
அல்லது தொடர்ந்து அடுத்த கட்டுரையைப் படிக்க

3. பாரதீய சனதா கட்சியின் தமிழ்ப் பகைச் செயல்கள்

1)
1998 முதல் 2004 வரையிலும் திரு வாச்பயீ-யின் (Vajpayee) தலைமையில் பாரதீய சனதா கட்சி இந்தியாவை ஆண்டது. அக்கால் திமிழைச் செம்மொழியென அறிவிக்க வேண்டும் என்ற தமிழ் மக்களின், தமிழ் நாட்டு அரசின் கோரிக்கையை நிராகரித்தது. தமிழ்நாட்டு முதலமைச்சர் கருணாநிதி காங்கிரசுக் கட்சியுடன் தேர்தல் கூட்டுச் சேருவதற்குப் போட்ட ஒரு நிபந்தம் "காங்கிரசுக் கட்சி இந்தியாவில் ஆட்சிக்கு வந்தால், இந்திய அரசு தமிழைச் செம்மொழியென அறிவிக்கும்" என்பதாகும். 2004-ல் காங்கிரசுக் கட்சி இந்தியாவில் ஆட்சிக்கு வந்தது. தமிழைச் செம்மொழியென அறிவித்தது.

2)
2014-ல் பாரதீய சனதா கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தது. திரு நரேந்திர மோடி 2014 மே மாதம் இந்தியாவின் தலைமையமச்சரானார். இது இப்படி இங்கே நடக்க தென் ஆப்பிரிக்க நாட்டில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. தென்னாப்பிரிக்காவில் பல்நூறாயிரம் தழர்களும், பல்நூறாயிரம் இந்திகாரரும் வாழ்கிறார்கள். தமிழரின் தொகை இந்தி மக்களின் தொகையை விடக் கூடுதல். 2014 சூன் திங்கள் வரையிலும் அங்குள்ள தமிழாசிரியர்கள் சிலர் இலவசமாகத் தமிழர்களுக்கு தமிழ் பயிற்றுவித்து வந்தார்கள். பாடம் நடத்துவதற்கு இந்தியத் தூதராலயம் (Indian High Commission) இலவசமாக இடம் கொடுத்தது. இது போல இந்தி பயிற்றுவதற்கும் இடம் கொடுத்தது. பாரதீய சனதா கட்சி 2014-ல் வந்த ஆட்சிக்கு வந்த ஒரே மாதத்தில் இந்தியத் தூதராலயம் இனிமேல் தமிழ் கற்பிக்க இலவசமாக இடம் கொடுக்க மாட்டோம், இந்தி படிப்பிக்க மட்டுமே இலவசமாக இடம் கொடுப்போம் என்று அறிவித்தது. [இது குறித்த கூடுதல் விவரங்களை துணையேடு 2-ல் [Reference 2] பார்க்கலாம்.]

3)
கீழடி அகழாய்விலே தமிழரின் தொன்மையயைக் காட்டும் பல தொல்பொருள்கள் அகழ்ந்தெடுக்கப்படன. அவ்வகழாழ்வுகளை பேற்பாரவை செய்தவர் அமர்னாத் இராமகிருட்டினன் என்பார். அகழாய்வுகளால் தமிழுக்குக் கிடைக்கும் பெருமை யை உலகுக்குத் தெரியாமல் மூடி மறைக்க கூடிய மட்டும் தலைமையச்சர் மோடி அரசு முயர்சி செய்திருக்கிறது. "தமிழ்நாட்டின் இரு பொற்காலங்களும், இன்றைய இருள் காலமும் " [துணையேடு - 3]

என்ற இலவச நூல் இதை வளக்கமாகச் சொல்கிறது. நான் இங்கே அந்நூலிலிருந்து இரு பத்திகளைக் கீழே தருகிறேன்."

"வெளிநாட்டுத் தமிழர்களும் கீழடி அகழாய்வு குறித்துப் பெருமகிழ்ச்சியடைந்தனர். வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை (Federation of Tamil Sangams of North America (FeTNA)) அமர்னாத் இராமகிருட்டினனை அமெரிகாவுக்கு வந்து, மூன்று கிழைமைகள் கீழடி அகழாய்வு குறித்து சொற்பொழிவுகளாற்றும் படி கேட்டுக் கொண்டது. அதற்கான அத்தனை செலவுகளையும் பேரவை ஏற்றுக் கொள்ளும். அமர்னாத் இராமகிருட்டினன் அமெரிக்காவுக்குப் போய் சொற்பொழிவாற்றுவதற்கு இந்திய அரசு அனுமதி கொடுக்க மறுத்தது. (www.scroll.in; August 6, 2018) ஏன்? தமிழ்நாட்டின் பழம்பெருமைகளை உலகறிந்து விடக் கூடாது என்ற காழ்ப்புணர்வே காரணமோ? வேறென்ன காரணமிதற்கு?"

"இந்திய அரசு நிறுவனங்களில் வேலை பார்க்கும் சமசுகிருதப் பண்டிதர்கள் வெளிநாடுகளில் நடக்கும் சமசுக்கிருத மாநாடுகளுக்குச் (conferences) சென்று சொற்பொழிவாற்றுவதுண்டு. அதற்கான செலவுகளை இந்திய அரசு கொடுக்கிறது. ஆனால் அமர்னாத் இராமகிருட்டினன் வட அமெரிக்கத் தமிழரின் செலவிலேயெ அமெரிக்காவுக்குச் சென்று கீழடி அகழாய்வு குறித்து சொற்பொழிவாறுவதற்குத் தடை போட்டிருகிறது இந்திய அரசு. இது மாற்றாந்தாய் மனப்பான்மையே அன்றோ?"

ஒருபானைக்கு ஒரு சோறு பதம் என்பார்கள். நான் மூன்று எடுத்துக்காட்டுகள் தந்திருக்கிறேன்.

உள்ளடக்கம் (முதற் பக்கம்) போக இங்கே கிளிக்கடிக்க
அல்லது தொடர்ந்து அடுத்த கட்டுரையைப் படிக்க

4. வெத்துப் பேச்சு போதாது, செயலிலே காட்டுங்கள்

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல். - திருக்குறள்

பாரதீய சனதா கட்சி கடந்த காலத்தில் (1998-2004; 2014-2023) தமிழுக்கு இழைத்த அநீதியை கடந்த அதிகாரத்தில் எடுத்துக் காட்டினோம். அண்மைக்காகதே தலைமையமைச்சர் திரு நரேந்திர மோடிக்கும், பிற பாரதீய சனதா கட்சி தலைவர்களுக்கும் தமிழின் தொன்மையைப் பற்றிய ஞானோதயமும், அதன் வழி தமிழ் மீது புதிய பாசமும் ஏற்பட்டது உண்மையேயானால், அதனைச் செயல் வழி காட்டுவார்களா?

1)
தற்போது இந்திய அரசு சமசுகிரித மொழிக்காகச் செலவிடும் பணம் அது தமிழ் மொழிக்காகச் செலவிடும் பணத்தை விட 25 மடங்கு. கடந்த 3 ஆண்டுகளில் இந்திய அரசு தமிழ் மொழிக்காக 22.94 கோடி உருபாயும், சமசுகிருத மொழிக்காக 643.85 கோடி உருபாயும் ஒதுக்கியது (இந்து செய்தித்தாள் (தமிழ்); ஆகத்து 9, 2023). பாரதீய சனதா கட்சி அடுத்த (2024) நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியமைத்தால், சமசுகிரித மொழிக்கும் தமிழ் மொழிக்கும் ஒரே அளவில் பணம் செலவிடும் என்று உறுதி சொல்லுமா? வெறுமே தமிழர்களிடம் சொன்னால் போதாது, பாரதீய சனதா கட்சியின் 2024 ஆங்கில மற்றும் இந்தி தேர்தல் அறிக்கையிலே (BJP's English and Hindi election manifesto) இடம் பெற வேண்டும்.

இங்கே ஒன்றரைக் கோடி உருபா, அங்கே இரண்டு கோடி உருபா, இங்கே ஒரு பல்கலலைக் கழகத்தில் தமிழ் கற்பிக்க பேராசிரியரை அமர்த்தினோம் என்று அவ்வப்போது அறிக்கை விட்டு நம்மை ஏமாற்றி விட முடியாது. இந்த ஏமாற்று வித்தைகளை நாம் அறிந்து கொண்டோம். நாம் வேண்டுவது, "சமசுகிருத மொழிக்காக ஓர் ஆண்டுக்கு எத்தனை பணம் செலவு செய்கிறீர்களோ, அதே அளவு தமிழுக்கும் செலவு செய்ய வேண்டும்." ஒவ்வோர் ஆண்டு இறுதியிலும் இந்திய அரசு சமசுகிருத மொழிக்காக எத்தனை பணம் செலவு செய்தது, தமிழுக்காக எத்தனை பணம் செலவு செய்தது என்று வெளிப்படையாக அறிவிப்பு வெளியிடுவோம் என்று பாரதீய சனதா கட்சி உறுதி கொடுக்குமா? பாரதீய சனதா கட்சி ஆட்சியில் கடந்த 9 ஆண்டுகளில் இந்திய அரசு சமசுகிருத மொழிக்காக எத்தனை பணம் செலவு செய்தது, தமிழுக்காக

எத்தனை பணம் செலவு செய்தது என்று தலைமையமைச்சர் மோடி சொல்லுவாரா?

2)
நடுவண் அரசுக்குக் கீழ்ப்பட்ட "நடுவண் இடைநிலைக் கல்வி வாரியப் (Central Board of Secondary Education (CBSE)" பள்ளிகள் எல்லாவற்றிலும் சமசுக்கிருதம் படிக்க வாய்ப்பிருக்கிறது. அது போல 2024-25 கல்வியாண்டிலிருந்து எல்லா நடுவண் இடைநிலைக் கல்வி வாரியப் பள்ளிகள் யாவற்றிலும் தமிழ் படிக்கவும் வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும். அப்படிச் செய்வதாக தலைமையமைச்சர் நரேந்திர மோடி நாடாளுமன்றத்தில் அடுத்த தேர்தலுக்கு முன்னால் அறிவிக்க வேண்டும்.

இவ்விரண்டு வேண்டுதல்களையும் பாரதீய சனதா கட்சியும், தலைமையமைச்சர் நரேந்திர மோடியும் அடுத்த தேர்தலுக்கு முன் இந்தியிலும், ஆங்கிலத்திலும் அறிவிப்பார்களானால், கட்சியும், திரு மோடியும் உண்மையிலேயே தமிழ் மீது பற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று உணர்ந்து அக்கட்சிக்குத் தேர்தல் பணியாற்ற நானும், என் நண்பர்களும் தயார்.

தலைமையமைச்சர் நரேந்திர மோடி அவர்களே உங்கள் பதிலுக்குக் காத்திருக்கிறோம்.

[உள்ளடக்கம் (முதற் பக்கம்) போக இங்கே கிளிக்கடிக்க]
அல்லது தொடர்ந்து அடுத்த கட்டுரையைப் படிக்க

5. காங்கிரசுக் கட்சியின் இராகுல் காந்தியும் தமிழும்

பாரதீய சனதா கட்சிக்கும், தலைமையச்சர் நரேந்திர மோடிக்கும் திடீரென தீராத தமிழ்ப் பாசம் ஏற்பட்டது போலவே காங்கிரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் இராகுல் காந்திக்கும் அண்மைக்காலத்தில் தமிழ்ப் பற்று ஏற்பட்டிருக்கிறது. 2023 மே மாதத்தில் அமெரிக்கத் தமிழர்களிடையே பேசும் போது, "தமிழ் மொழிக்கு எந்தவித அச்சுறுத்தலும் ஏற்பட ஒரு போதும் அனுமதிக்க மாட்டேன்" என்று சொல்லியிருக்கிறார் (thanthitv.com; மே 31, 2023).

அரசு ஒரு மொழியை மக்களின் அன்றாடத் தேவைக்குப் பயன் படுத்தா விட்டால் மொழி அழிந்து போகும். இன்று இந்திய அரசு நடத்தும் தென்னிந்தியத் தொடர்வண்டித் துறை (South Indian Railways) தமிழ்நாட்டில் பல இடங்களில் கொடுக்கும் பயணச் சீட்டில் தமிழ் இல்லை.

தமிழ்நாட்டிலுள்ள இந்திய நடுவண் அரசு அலுவலகங்களில் (Indian Central government offices) வேலை பார்க்கும் பலருக்கு தமிழ் தெரியாததால் தமிழ்நாட்டு மக்களுக்குப் பெருந்தொல்லை. என் மூதாதையர் பல நூறு ஆண்டு காலமாக வாழும் இம்மண்ணில் நான் என் மொழியில் அரசு அலவலர்களிடையே காலங்காலமாக இம்மண்ணில் பேசப்படும் மொழியில் பேச, எழுத முடியாதென்ற நிலை ஏற்பட்டிருப்பதை விட தமிழ்மொழிக்கு வேறென்ன அச்சுறுத்தல் வேண்டும்? இராகுல் காந்தி அவர்கள் "தமிழ் மொழிக்கு எந்தவித அச்சுறுத்தலும் ஏற்பட ஒரு போதும் அனுமதிக்க மாட்டேன்" என்று சொன்னது அவரது நாநுனியில் எழாமல், நெஞ்சத்தின் ஆழத்திலிருந்து எழுந்திருக்குமேயானால், அவர் கீழ்க்கண்ட எம் வேண்டுதலை ஏற்றுக் கொள்ளட்டும்.

1)
காங்கிரசுக் கட்சியின் அடுத்த (2024) நாடாளுமன்ற ஆங்கில-இந்தி தேர்தல் அறிக்கைகளில் (2024 Parliament Election Manifesto in English and Hindi), தாம் ஆட்சிக்கு வந்த ஓராண்டுக்குள் தென்னிந்தியத் தொடர்வண்டித் துறை (South Indian Railways) தமிழ்நாட்டில் கொடுக்கும் பயணச் சீட்டில் தமிழ் இடம் பெறும் (இரண்டு மொழிகள் தான் இடம் பெறுமென்றால் அவை தமிழும் ஆங்கிலமும்) என்று உறுதி கொடுக்க வெண்டும்.

2)

காங்கிரசுக் கட்சியின் அடுத்த (2024) நாடாளுமன்ற ஆங்கில-இந்தி தேர்தல் அறிக்கைகளில், தாம் ஆட்சிக்கு வந்த ஓராண்டுக்குப்பின் தமிழ்நாட்டிலுள்ள இந்திய நடுவண் அரசு அலுவலகங்களில் வேலை பார்க்க ஐ.எ.எசு. அதிகாரிகள் முதல் அடிப்படை அலுவலர்கள் வரை தமிழ் தெரிந்தவர்களை மட்டுமே அமர்த்தும் என்று உறுதி கொடுக்க வெண்டும். பள்ளியில் தமிழை ஒரு பாடமாக (அல்லது ஒரு மொழியாக) படித்திருக்க வேண்டும்.

இங்கு இன்னொன்றும் சொல்லியே ஆக வேண்டும். 2004 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னால் காங்கிரசுக் கட்சியும், அதனோடியைந்த கூட்டுக் கட்சிகளும் விடுத்த அறிக்கையில், தாம் ஆட்சிக்கு வந்தால் இந்திய அரசியற் சட்டத்தில் (Indian Constitution) குறிப்பிடப் பட்டுள்ள எல்லா மொழிகளையும் இந்தியாவின் ஆட்சி மொழியாக்குவதைப் பற்றி ஆராய ஒரு குழு (committee) அமைக்கப் படும் என்று கூறப்ப்பட்டது ["set up a committee to examine the question of declaring all languages in the Eight Schedule of the Constitution as official languages." - The Hindu, May 28, 2004]. காங்கிரசுக் கட்சியும், அதனோடியைந்த கூட்டுக் கட்சிகளும் 2004-வது நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தன. ஆனால் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை.

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்."

[உள்ளடக்கம் (முதற் பக்கம்) போக இங்கே கிளிக்கடிக்க]
அல்லது தொடர்ந்து அடுத்த கட்டுரையைப் படிக்க

துணையேட்டுப் பட்டியல்

1. Indian Government and Tamil Language (Ancient Rivalries and Current Tug of War) (Chapters 1, 2, 3) - Go to the following website to download or read the book free.
https://archive.org/details/indian-government-and-tamil-language-ancient-rivalries-and-current-tug-of-war

2. Hindi Imposition Papers-Volume 8 (Chapter 12) - Go to the following website to download or read the book free.
https://archive.org/details/hindi-imposition-papers-volume-8-hindi-propagation-in-foreign-countries

3. தமிழ்நாட்டின் இரு பொற்காலங்களும், இன்றைய இருள் காலமும் (பகுதி 10.11) - இந்நூலை இலவசமாகப் படிக்க அல்லது கீழிறக்க (download) கீழ்க்காணும் வலைத்தளத்துக்கு போக.
https://archive.org/details/tamil-book-thamizh-naaddin-iru-porkaalangkalum-intraiya-irul-kaalamum

உள்ளடக்கம் (முதற் பக்கம்) போக இங்கே கிளிக்கடிக்க

முற்றும்